இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 05.01.2026

# செய்ய முடியாத சாதனையைச் செய்து காட்டிய முதலமைச்சர்!

அரசு ஊழியர்களின் 22 ஆண்டுகாலக் கோரிக்கை அது. ‘அதை வழங்க முடியாது’ என்று பலராலும் கருத்துச் சொல்லப்பட்டு வந்தது. ‘இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாத நிலையில் அரசு ஊழியர்களின் நம்பிக்கையை தி.மு.க. அரசால் பெற முடியவில்லை’ என்றும் எதிர்க்கட்சிகள் மனதுக்குள் சிரித்துக் கொண்டு இருந்தார்கள்.

ஆனால் இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் குடும்பங்களின் உள்ளம் குளிரும் வகையில் மகிழ்ச்சியான, நிறைவான, வாழ்நாள் முழுவதும் மனம் மகிழும் அளவிலான அறிவிப்பைச் செய்து, யாராலும் செய்ய முடியாத சாதனையைச் செய்து காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இருபது ஆண்டுகளாக தலைமைச் செயலகம் பார்க்காத காட்சியை நேற்றைய தினம் தலைமைச் செயலகம் கண்டது. முதலமைச்சர் அறைக்கு வந்த அரசு ஊழியர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கேக் ஊட்டினார்கள். அரசு ஊழியர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு கேக் ஊட்டினார்கள். அரசு ஊழியர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடிக் கொண்டார்கள்.

உறுதி அளிக்கப்பட்ட வாக்குறுதியை ‘உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டமாக’ அறிவித்து விட்டார் உறுதிமிக்க முதலமைச்சர் அவர்கள்.

‘கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிதிநிலைமை சீரானதும் நிறைவேற்றுவோம்’ என்றார் முதலமைச்சர். அதனைச் செய்து காட்டி விட்டார் முதலமைச்சர் அவர்கள்.

- ★ **மாநில அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். இவ்வாறு 50 சதவீதத்திற்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு, பணியாளர்களின் 10 சதவீத பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்திற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்கும்.**
- ★ **ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.**
- ★ **அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும்.**
- ★ **ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும்.**

இவ்வாறு அறிவித்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

அரசு ஓய்வூதியம் என்பது அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வுக்குப் பிறகும், அவர்கள் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய சமூக பாதுகாப்பு என்பதை உறுதி செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

தமிழ்நாடு அரசு பழைய ஓய்வூதியத் திட்டத்தை ஏற்பதன் மூலம் ஓய்வூதியப் பங்களிப்புக்கு செலுத்த வேண்டிய கூடுதல் பங்களிப்பு தொகையாக ரூ.13 ஆயிரம் கோடியும், பணியாளர்கள், ஆசிரியர்கள் நலனுக்காக அரசுப் பங்களிப்பாக ரூ.11 ஆயிரம் கோடியும் ஆக ரூ.24 ஆயிரம் கோடி நிதிச்சுமையை தமிழ்நாடு ஏற்றிருப்பதும், ஓய்வூதியர் மறைவுக்கு பிறகு குடும்ப ஓய்வூதியமாக 60 சதவீதம் வழங்கு முன்வந்திருப்பதும், நாட்டுக்கு முன்னுதாரணமாக அமையும்.

“எங்கள் ஓய்வு கால வாழ்க்கை அர்த்தமுள்ளதாக முதலமைச்சர் மாற்றி உள்ளார். இன்றைய அறிவிப்பின் மூலம் 6.5 லட்சம் பேர் வாழ்க்கையில் முதலமைச்சர் ஒளியேற்றி வைத்திருக்கிறார்” என்று அரசு ஊழியர் சங்கத்தினர் சொல்லி இருக்கிறார்கள்.

புதிய திட்டமாக ‘தமிழ்நாடு உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்’ (Taps) என்ற பெயரில் வெளியிடப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு முன்பு இருந்து வந்த பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்கள் மீண்டும் கிடைக்கும் வகையில் இத்திட்டம் இருக்கிறது.

புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக் காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்த பட்ச ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு மாண்புமிகு முதலமைச்சரின் கருணையின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

ஒன்றிய அரசு தந்து வருகின்ற கடுமையான நிதி நெருக்கடிகளுக்கும், நிதிச் சுமைகளுக்கும் மத்தியிலும், “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்” என்ற புதிய திட்டத்தை அறிவித்து விட்டார் முதலமைச்சர். அது தான் மிகமிக முக்கியமானது ஆகும்.

ஓய்வூதியத்தை வழங்குவது குறித்து, தகுந்த பரிந்துரைகளை வழங்கிட அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்து, அந்தக் குழுவின் அறிக்கையை ஏற்று சிறப்புமிக்க அறிவிப்பை முதல்வர் வழங்கி இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தொடர்ந்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியபடி இருந்தார்கள். இதன் தொடர்ச்சியாக “தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme - TAPS)” செயல்படுத்திக் காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“முத்தமிழறிஞர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எவ்வாறு காவலராக திகழ்ந்தாரோ அதேபோன்றுதான் நமது முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களும் இருந்து வருகிறார். நாங்கள் நம்பி வந்ததை நிறைவேற்றி இருக்கிறார் முதலமைச்சர்” என்று சொல்லி இருக்கிறார்கள் அரசு ஊழியர் சங்கத்தினர்.**

“நிதிநிலைமை சீரடைய சீரடைய அனைத்துத் தரப்பினரின் கோரிக்கைகளும் நீங்கள் கேட்காமலேயே நிறைவேறும்” என்று சொல்லி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**2003 ஆம் ஆண்டு அரசு ஊழியர்களை பாடாய் படுத்தினார் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா. பழனிசாமியும் தன் பங்குக்கு கொச்சைப்படுத்தினார். அரசு ஊழியர்கள் வாங்கும் சம்பளத்தை விளம்பரமாகப் போட்டு எரிச்சல் உண்டாக்கினார். இதனால் காயம் பட்ட அரசு ஊழியர்கள் அனைவருக்கும் இதயத்தில் பால் வார்த்துவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.1.2026) சென்னை, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற, மறைந்த திரைப்பட தயாரிப்பாளர் எம்.சரவணன் அவர்களின் படத்திறப்பு மற்றும் புகழ் வணக்கம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அவரது திருவுருவப் படத்தை திறந்து வைத்து, மலர்கொத்து வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து குழும நிறுவனத்தின் இயக்குநர் என்.ராம், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், நாடாளுமன்ற உறுப்பினர் கலைஞானி கமல்ஹாசன், கவிப்பேரரசு வைரமுத்து, நல்லி குப்புசாமி, இயக்குநர்கள் எஸ்.பி.முத்துராமன், வி.சி.குகநாதன், ஏ.வி.எம். குடும்பத்தைச் சார்ந்த எம்.பாலசுப்ரமணியம், எம்.எஸ்.குகன், திருமதி அருணா குகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## டிஜிட்டல் கனவை நனவாக்கும் மாபெரும் கல்விப் புரட்சித் திட்டம்!

# மாணவர்களுக்கு 10 லட்சம் மடிக் கணினிகள்!

### “உலகம் உங்கள் கையில்” எனும் மாபெரும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, ஜன. 5-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் இன்று (5.1.2026) மாலை 3 மணியளவில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் “உலகம் உங்கள் கையில்” என்னும் மாபெரும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார்கள்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு, மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதல் தலைமுறை பட்டமளிப்பு (FG) திட்டம், போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகைத் திட்டம், சமூக நீதி விடுதிகள் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற “உலகம் உங்கள் கையில்” என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு 20 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, இத்திட்டம் மாநிலம் முழுவதும் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படுகிறது. முதல் கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையிலும் இன்று (5.1.2026 - திங்கட்கிழமை) மாலை 3 மணியளவில் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மைய வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்துவம், விவசாயம், சட்டம், பல வகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்துறைப் பயிற்சி போன்ற அனைத்துத் துறைகள் சார்ந்த மாணவர்களுக்கும் 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன.

**உயர்தர மடிக்கணினி பையும் வழங்கப்படுகிறது!**

“கல்வி அனைவருக்கும்! உயர்வு ஒவ்வொருவருக்கும்!” என்ற நோக்கத்துடன் தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த Dell, Acer, HP போன்ற உலகத் தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினிகளில் Intel i3 / AMD Ryzen 3 Processor, 8 GB RAM, 256 GB SSD நினைவகம், Windows 11 Home Strategic மற்றும் BOSS Linux OS ஆகிய மென்பொருள்கள் முன்னதாக நிறுவப்பட்டுள்ள நிலையில், நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக MS Office 365, மேலும் “அறிவைத் தேடும் இளைய தலைமுறைக்குப் புதிய சாளரம்” என அமையும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளான Perplexity Pro-வின் ஆறு மாத சந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் உயர்தர மடிக்கணினி பையும் வழங்கப்படுகிறது.

அரசு வழங்கும் விலையில்லா மடிக்கணினிகள், கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும், சமூக-பொருளாதார முன்னேற்றத்திற்கும் நேரடி ஆதாரமாக உதவுகின்றன. டிஜிட்டல் திறன் மேம்பாடு மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் (IT) துறை, மென்பொருள் உருவாக்கம் (Software Development), தரவு உள்ளீடு (Data Entry), டிஜிட்டல் சந்தைப்படுத்தல் (Digital Marketing), வரைகலை வடிவமைப்பு (Graphic Design), குறியிடுதல் (Coding), வலை வடிவமைப்பு (Web Designing), செயற்கை நுண்ணறிவு கருவிகள் (AI Tools), சுயாதீன வேலை (Freelancing) போன்ற துறைகளில் “புதிய வாய்ப்புகளைப் பெறும் புதிய தலைமுறை” என்ற அளவில் தகுதியானவர்களாக மாணவர்களை மாற்றிட உதவுகிறது.

இதனால் குடும்ப வருமானம் உயர்ந்து, கிராம-நகர இடைவெளி குறைந்து, தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழில் முயற்சிகளும் உருவாகும் வாய்ப்பு அமையும். இத்திட்டம், “கல்வி மூலம் சமூக மேம்பாடு; தொழில்நுட்பம் மூலம் பொருளாதார முன்னேற்றம்” என்பதையும், “உலகம் உங்கள் கையில்” என்ற தமிழ்நாட்டின் மாபெரும் டிஜிட்டல் கனவையும் நனவாக்கும் வரலாற்றுப் பெருமைகள் சேர்க்கும் மாபெரும் கல்விப் புரட்சித் திட்டம் ஆகும்.

இவ்விழாவில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சாதனை படைத்த மாணவர்கள், முக்கிய பெருமக்கள், அமைச்சர்கள், நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் முதலியோர் பங்கு பெறுகிறார்கள்.

## இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி

# வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம்!

### பேரவைத் தலைவர் மு.அப்பாவு கோரிக்கை ஏற்பு! அரசாணை வெளியீடு!

நெல்லை, ஜுன் 5 -

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அமைப்பதற்கு, பேரவைத் தலைவரும், இராதாபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான மு.அப்பாவு அவர்களின் கோரிக்கையினை முதலமைச்சர் அவர்கள் ஏற்று, சட்டமன்றத்தில் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மூலம் அதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள், வள்ளியூரில் புதிதாக கூடுதல் மாவட்ட நீதிமன்றம் திறப்பதற்கான அரசாணை அறிவிப்பினை தற்போது வெளியிட்டுள்ளார்கள். அது போல், பேரவைத் தலைவர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று திசையன்விளையிலும், Cum-court திறப்பதற்கு ஏற்கெனவே அரசாணை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள இரண்டு நீதிமன்றங்களையும் திறப்பதற்கு அரசாணை அறிவிப்பு வெளியிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் நன்றியைத் தெரிவிப்பதோடு, மிக விரைவிலேயே இரண்டு நீதி மன்றங்களும் திறக்கப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

### தர்மபுரி கிழக்கில் வாக்காளர் சரிபார்ப்புப் பணி!

தர்மபுரி, ஜன.5–

தர்மபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற தி.மு.க. நிர்வாகிகள் செயற்குழுக் கூட்டத்தில் திராவிட சமத்துவ பொங்கல் விழா கொண்டாடுதல், சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த சீராய்வு உள்ளிட்ட கழக ஆக்க பணிகள் குறித்து தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. ஆலோசனைகள் வழங்கி பேசினார்.

இதில் முன்னாள் மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி, தர்மபுரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் டி.செங்குட்டுவன், நகரச் செயலாளர்கள் நாட்டான்.மாது, எம்.பி. கௌதம் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் நகரக் கழக நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு தலைவர்கள் உள்ளிட்ட தி.மு.க. வினர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம்,தலைமை செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், எம்.அப்துல்சலாம், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் மோ.தேன்மொழி, தலைமை கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் பக்தவச்சலு , ராஜசேகர், காடுவெட்டி ஏழுமலை மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.